## கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றனர்?

கூட்டுக் கணக்குகளில் உள்ள வைப்புத் தொகைகளுக்காக, கூட்டுக் கணக்கின் ஒவ்வொரு கூட்டுக் கணக்குதாரரின் பங்கும் அவரது சொந்தப் பெயரில் இருக்கும் மற்ற காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத் தொகைகளுடன் இணைக்கப்படுகின்றன. காப்புறுதி செய்யப்பட்ட மொத்த வைப்புத்தொகைகளுக்கு $75,000 வரை காப்புறுதி செய்யப்படுகிறது. வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தின் உறுப்பினர் மற்றவகையில் காண்பிக்கின்ற பதிவேடுகளை வைத்திருக்காத வரை, ஒவ்வொரு கூட்டுக் கணக்குதாரரும் கூட்டுக் கணக்கில் ஒரு சரிசமப் பங்கைக் கொண்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது.




அனைத்து மதிப்புகளும் சிங்கப்பூர் வெள்ளிகளில் கூறப்பட்டுள்ளன.

## இந்தப் பாதுகாப்பை நீங்கள் எவ்வாறு பெற்று மகிழலாம்?

நீங்கள் தன்னியக்கமாகப் பாதுகாக்கப்படுகிறீர்கள். விண்ணப்பப் படிவம் எதையும் நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டியதில்லை அல்லது பிரீமியம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. உங்கள் தனிப்பட்ட தகவல்களை உங்கள் வங்கி (அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்குகின்றவை) அல்லது நிதி நிறுவனத்திடம் சரிபார்த்துக்கொள்ளவும்.

## உங்கள் வங்கி (அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்குகின்றவை) அல்லது நிதி நிறுவனம் நொடித்து விட்டால் நீங்கள் என்ன செய்யவேண்டும்?

ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. உங்களுக்கு எவ்வாறு இழப்பீடு அளிக்கப்படும் என்பது குறித்து செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் SDIC-இன் இணையத்தளம் போன்ற பொதுத் தொடர்பு ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படும் அறிவிப்புகளை எதிர்பாருங்கள்.

## மேலும் விவரங்களைக் கண்டறியுங்கள்

வைப்புத்தொகை காப்புறுதித் திட்டம் குறித்து மேலும் தகவல்களை அறிய, www.sdic.org.sg என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

உங்களுடைய கருத்துக்களையும் கேள்விகளையும் வரவேற்கிறோம். தயவுசெய்து infosdic@sdic.org.sg என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது www.facebook.com/sdicsg என்ற Facebook பக்கத்தில் எங்களுக்குத் தெரிவியுங்கள்.

SDIC
Deposit Insurance
Policyowners' Protection

**வைப்புத்தொகை காப்புறுதித் திட்டம்**

# S$75,000 வரையிலான உங்கள் வைப்புத்தொகைகளுக்கு நாங்கள் காப்புறுதி வழங்குகிறோம்.

இப்போது நீங்கள் கவலையின்றி ஓய்வெடுக்கலாம்.




SDIC
Deposit Insurance
Policyowners' Protection

sdicsg

# SDIC என்பது என்ன?

சிங்கப்பூர் வைப்புத்தொகை காப்புறுதி நிறுவனம் (SDIC) என்பது வைப்புத்தொகை காப்புறுதித் (DI) திட்டத்தை நிர்வகிப்பதற்காக வைப்புத்தொகை காப்புறுதி மற்றும் காப்புறுதி ஒப்பந்த உரிமையாளர்களின் பாதுகாப்புத் திட்டங்கள் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும். சிங்கப்பூரில் உள்ள எல்லா முழுமையான வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தின் உறுப்பினர்களாகும்.

**வைப்புத்தொகை காப்புறுதித் திட்ட உறுப்பினர்களின் முழுமையான பட்டியலுக்கு, www.sdic.org.sg/sm_list/di_scheme_members என்ற இணையப்பக்கத்தைப் பார்வையிடவும்.**

## வைப்புத்தொகை காப்புறுதித் திட்டம் என்பது என்ன?

ஒரு முழுமையான வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் உள்ள உங்கள் வைப்புத் தொகைகளை வைப்புத்தொகை காப்புறுதித் திட்டம் பாதுகாக்கிறது. இந்தப் பாதுகாப்பை தனிநபர் வைப்பீட்டாளர்களுக்கு மட்டுமல்லாமல் தனி உரிமையாளர்கள், நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் போன்ற வங்கி-அல்லாத வைப்பீட்டாளர்களுக்கும் சிங்கப்பூர் வைப்புத்தொகை காப்புறுதி நிறுவனம் வழங்குகிறது.

## வைப்புத்தொகை காப்புறுதித் திட்டம் எதைப் பாதுகாக்கிறது?

**கீழ்கண்ட கணக்குகளில் உள்ள சிங்கப்பூர் வெள்ளி வைப்பீடுகள்/ரொக்கங்கள்:**

- ✓ சேமிப்பு, நடப்பு மற்றும் நிரந்தர வைப்புத்தொகைக் கணக்குகள்
- ✓ வாடியா கணக்குகள்
- ✓ முரபஹா கணக்குகள்
- ✓ அறக்கட்டளை மற்றும் வாடிக்கையாளர் கணக்குகள்
- ✓ மத்திய சேமநிதி முதலீட்டுத் திட்டம் (CPFIS) கணக்குகள்
- ✓ ஓய்வுக்காலத் தொகைத் திட்டம் (CPFRS) கணக்குகள்
- ✓ துணை ஓய்வூதியத் திட்டக் (SRS) கணக்குகள்
- ✗ அந்நிய செலவாணி வைப்புத்தொகைகள்
- ✗ கட்டமைக்கப்பட்ட வைப்புத்தொகைகள்
- ✗ யூனிட் டிரஸ்ட், பங்குகள் மற்றும் பிற கடனீட்டுப்பத்திரங்கள் போன்ற முதலீட்டு நிதிப் பொருட்கள்

## நீங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறீர்கள்?

வைப்பீட்டாளர் தலா ஒருவருக்கு மற்றும் வைப்புத்தொகை காப்புறுதித் திட்ட உறுப்பினர் தலா ஒருவருக்கு, கூட்டுத்தொகை வரம்பு $75,000 வரை உங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத்தொகைகளுக்குப் பாதுகாப்பளிக்கப்படுகிறது. – அதே உறுப்பினருடன் நீங்கள் எத்தனைக் கணக்குகள் வைத்திருந்தாலும் அது பொருட்படுத்தப்பட மாட்டாது.

**காப்புறுதி செய்யப்பட்ட தொகை:**
**$75,000**
வரையிலான மொத்த வைப்புத்தொகைகள்

**காப்புறுதி செய்யப்படாத தொகை:**
$75,000 வரம்பிற்கு மேற்பட்ட தொகை

### அதிகபட்ச பாதுகாப்பு

சேமிப்புக் கணக்கு
**$25,000**
+
நடப்புக் கணக்கு
**$65,000**
=
கூட்டுத் தொகை:
**$90,000**

→

காப்புறுதி செய்யப்பட்ட தொகை:
**$75,000**



**காப்புறுதி செய்யப்படாத தொகை:** $15,000

### CPFIS மற்றும் CPFRS கணக்குகளின் கீழ் உள்ள பணங்கள்

கூடுதலாக, CPFIS மற்றும் CPFRS கணக்குகளின் கீழ் உள்ள உங்கள் வைப்புத்தொகைகள் $75,000 வரையிலான ஒரு கூட்டுத்தொகைக்குத் தனியாக காப்புறுதி செய்யப்படுகிறது.

| சேமிப்புக் கணக்கு | CPFIS/CPFRS கணக்கு |
|---|---|
| $60,000 | $100,000 |
| காப்புறுதி செய்யப்பட்ட தொகை: $60,000 | காப்புறுதி செய்யப்பட்ட தொகை: $75,000 |
|  |  |
| | காப்புறுதி செய்யப்படாத தொகை: $25,000 |

அனைத்து மதிப்புகளும் சிங்கப்பூர் வெள்ளிகளில் கூறப்பட்டுள்ளன.

**உங்கள் முழுமையான வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் நீங்கள் வைத்திருக்கும் $75,000 வரையிலான வைப்புத் தொகைகள் வைப்புத்தொகை காப்புறுதித் (DI) திட்டத்தின் கீழ் தன்னியக்கமாக பாதுகாப்பளிக்கப்படுகின்றன.**

### அறக்கட்டளைக் கணக்குகள்

அறக்கட்டளை மற்றும் வாடிக்கையாளர் கணக்குகள் ஒவ்வொன்றும் $75,000 வரை காப்புறுதி செய்யப்படுகின்றன.

|  |  |  |
|---|---|---|
| தந்தையின் சேமிப்புக் கணக்கு | தந்தையால் அறக்கட்டளைக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் மகனின் சேமிப்புக் கணக்கு | தந்தையால் அறக்கட்டளைக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் மகளின் சேமிப்புக் கணக்கு |
| $40,000 | $80,000 | $60,000 |
| செய்யப்பட்ட தொகை: $40,000 | செய்யப்பட்ட தொகை: $75,000 | செய்யப்பட்ட தொகை: $60,000 |
|  |  |  |
| | காப்புறுதி செய்யப்படாத தொகை: $5,000 | |

### தனி உரிமையாளர் வணிகக் கணக்கு

நீங்கள் ஒரு தனி உரிமையாளர் எனில், உங்கள் தனிநபர் கணக்குகள் மற்றும் உங்கள் நிறுவனத்தின் கணக்குகளில் உள்ள வைப்புத்தொகைகள் கூட்டிணைக்கப்பட்டு, ஆக மொத்தத் தொகைக்கும் $75,000 வரை காப்புறுதி செய்யப்படுகிறது.

தனிநபர் கணக்கு
**$25,000**
+
நிறுவனத்தின் கணக்கு
**$65,000**
=
கூட்டுத் தொகை:
**$90,000**

→

காப்புறுதி செய்யப்பட்ட தொகை:
**$75,000**



**காப்புறுதி செய்யப்படாத தொகை:** $15,000

அனைத்து மதிப்புகளும் சிங்கப்பூர் வெள்ளிகளில் கூறப்பட்டுள்ளன.